மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

அ.வ.எண்.6/2019

பி.வா.சா.1

பெயர் :முகமது நவாஸ் அப்துல் காதர் தேதி :22.07.2024

வயது : த/பெ :

கிராமம் : தொழில் :

மாவட்டம் :

1873 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை

1. நான் குடியிருந்து வரும் வீட்டின் வடபுறமும், தென் புறமும் தெரு உள்ளது என்றால் சரிதான். மேற்புறம் சாகுல் ஹமீது இடம் உள்ளது. மேற்புறம் முகமது மைதீன் இடம் உள்ளது என்றால் சாகுல் ஹமீதின் மகன் முகமது மைதீனுக்கு பாகப்பிரிவினைப்படி கிடைத்தது. கீழ்புறம் ஆதம் இஸ்மாயில் இடம் உள்ளது. மேற்படி நான்கு எல்கைமால்களுக்கும் உள்ளே தான் நான் குடியிருக்கும் வீடு உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்து தான் பிராது தபசில் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2.பிராது தபசில் சொத்தின் பழைய எண். 4/42 என்றாலும், புதிய எண். 4/100 என்றாலும் சரிதான். பிராது தபசில் பழைய சர்வே எண். 817 என்றாலும், புதிய சர்வே எண். 817/37 என்றாலும் சரிதான். பிராது தபசில் சொத்திற்கு பட்டா முன்பு எனது தகப்பனார் பெயரில் பட்டா இருந்தது என்றால் என் தாத்தா பெயருக்கு பாகப்பிரிவினைப்படி சொத்து இருந்து வாரிசு அடிப்படையில் எனது தகப்பனார் பெயருக்கு பட்டா வந்தது. எனது தாத்தா பெயருக்கு தபசில் சொத்து பட்டா இருந்ததா என்றால் இல்லை.

3. தற்போது பிராது தபசில் சொத்திற்கு பட்டா வாதி பெயரில் உள்ளது என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் பிராது தபசில் சொத்திற்கு வாதி பெயருக்கு மாறிய பட்டா மாறுதல் உத்தரவு என்றால் தெரியாது. எனக்கு எல்லா விபரமும் தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என பொய்யாக

சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிராது தபசில் சொத்திற்கு தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் விசாரித்து சொல்லலாமா என்றால் தெரியாது. பிராது தபசில் சொத்திற்கு 2015 ல் இருந்து வாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் தெரியாது.

4. பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டிற்கு வீட்டு வரி ரசீது செலுத்தி உள்ளேனா என்றால் தெரியாது. இந்த வழக்கு பற்றிய விபரம் தெரியும். பிராது தபசில் சொத்திற்கு வீட்டு வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. 1993 ல் இருந்து பிராது தபசில் சொத்திற்கு வீட்டு வரி ரசீது வாதி பெயரில் உள்ளது என்றால் தெரியாது. இந்த வழக்கில் வாதி பட்டா மற்றும் வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளதை பார்த்துள்ளேனா அல்லது வழக்கறிஞரிடம் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் வழக்கறிஞரிடம் கேட்டேன் . யார் பெயரில் உள்ளது என்றால் சரியாக நினைவில் இல்லை. நான் பிராது தபசில் சொத்திற்கு இன்று வரை தீர்வை செலுத்தியது கிடையாது என்றால் சரிதான்.

5. நான் குடியிருக்கும் வீட்டிற்கு குடிநீர் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். குடிநீர் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. குடிநீர் கட்டண ரசீது வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. பிராது தபசில் சொத்தில் உள்ள குடிநீர் இணைப்பிற்கு வாதி குடிநீர் கட்டண ரசீது தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டிற்கு குடிநீர் இணைப்பு 1997 ல்இருந்து வாதி பெயரில் இருந்து வருகிறது என்றால் தெரியாது.

6. நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் மின் கட்டண ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. மாதம் தோறும் மின் கட்டணம் செலுத்துகிறேன் என்றால் சரிதான். மின் கட்டண ரசீதில் யார் பெயர் உள்ளது என்றால் 2015 வரை எனது தகப்பனார் பெயரில் உள்ளதாக நினைவில் உள்ளது. தற்போது யார் பெயரில் உள்ளது என்று தெரியாது. இறுதியாக மின் கட்டணம் செலுத்திய ரசீதை

தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். மின் கட்டணம் செலுத்திய ரசீதை தாக்கல் செய்தால் யார் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்திற்கு மின் இணைப்பு வாதி பெயரில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல்செய்துள்ள பாகப்பிரிவினை ஆவணம் 1930 ம் ஆண்டுக்குரியது. பி.வா.சா.ஆ. 3 ஆன பாகப்பிரிவினை ஆவணத்தில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. பிராது தபசில் சொத்தின் வீட்டு எண் அதில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காண்பிக்கப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ. 3 ல் பிராது தபசில் சொத்தின் வீட்டு எண் எங்குள்ளது என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ. 3 ல் பிராது தபசில் சொத்தின் வீட்டு எண் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 3 ல் எனது தாத்தாவிற்கு எத்தனை அயிட்ட சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் வீடு மட்டும் தெரியும். மற்றவை தெரியாது. பி.வா.சா.ஆ. 3 ல் எனது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் என் கைவசம் உள்ளது என்றால் வீடு மட்டும் உள்ளது. வீடு மட்டும் உள்ளது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. எனது தகப்பனார் உடன் பிறந்தவர்கள் அனைவரும் காலமாகிவிட்டார்கள் என்றால் சரிதான். எனது அத்தைமார்களுக்கு திருமணம் முடிந்து 40, 50 ஆண்டுகள் இருக்குமா என்றால் சரியாக நினைவில் இல்லை. திருமணத்திற்கு பிறகு எனது அத்தைமார்கள் அவர்களது கணவருடன் தனிக்குடித்தனம் நடத்தி வந்தார்கள் என்றால் தெரியாது. எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை எனது தகப்பனாரின் உடன் பிறந்தவர்கள் பிரித்து தர கேட்டார்களா என்றால் இல்லை. கூட்டாக அனுபவித்து வந்தார்கள்.பிராது தபசில் சொத்து கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து கூட்டாக உள்ளது என்பதற்கு ஏதாவதுஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

9. நான் இந்த வழக்கில் பாகப்பிரிவினை கேட்டு எந்தவிதமான எதிர்க்கோரிக்கை பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். பிராது தபசில் வீட்டை கட்டியது எனது தகப்பனார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆன கிரைய பத்திரம் கேரள மாநிலம், பாரசாலையில் பதிவுசெய்யப்பட்டது என்றால் எனது தகப்பனார் எழுதியே கொடுக்கவில்லை. ஆள் மாறாட்டம் செய்து எழுதிக்கொடுத்துள்ளார்கள். கேரள மாநிலம், பாரசாலையில் பதிவுசெய்ததால் குறைவு கட்டணம் செலுத்தக்கேட்டு வாதிக்கு தனி துணை ஆட்சியர் அறிவிப்பு அனுப்பியதில் குறைவு கட்டணத்தை வாதி செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. தனி துணை ஆட்சியரிடம் குறைவு கட்டணத்தை வாதி செலுத்தியதற்கான ரசீது வா.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

10. குறைவு கட்டணத்தை செலுத்தும் முன்பு 1998 ல் முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து நான் குடியிருக்கும் வீட்டை அளக்க வந்தார்கள் என்றால் தெரியாது. 1998 ல் நான் அந்த வீட்டில் தான் குடியிருந்தேன். ஆனால் வெளியூரில் வேலை பார்த்தேன். 1998 ல் எனது தகப்பனார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். 1998 ல் முறப்பநாடு சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து நான் குடியிருக்கும் வீட்டை அளவீடு செய்ய வரும் போது நானோ, எனது தகப்பனாரோ எந்த வித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் 1998 காலக்கட்டத்தில் எனது தகப்பனாருக்கு மதுரையில் கடை இருந்ததால் எனது தகப்பனார் அங்கு இருந்தார். நாங்களும் மதுரையில் உள்ள கடையில் எனது தகப்பனாருக்கு கீழ் வேலை செய்து வந்தோம். அதனால் என்ன நடந்தது என்று தெரியாது.

11. எனது தகப்பனார் இறக்கும் வரை பிராது தபசில் வீட்டில் தான் இருந்தார் என்றாலும், வெளியூர் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. நானும், 2ம் பிரதிவாதியும் அளவீடு செய்யும் சமயம் பிராது தபசில் வீட்டில் தான் இருந்தோம் என்றால் சரியல்ல. நான் சொன்னமாதி அளவீடு செய்யும் சமயம் நான் மதுரையில் இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பஞ்சாயத்து தலைவராக இருந்துள்ளார் என்றால்

சரிதான். அதனால் எல்லா விபரமும் எனது தகப்பனாருக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரம் பற்றி வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் எனக்கு தெரியவந்தது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எனக்கு 29.11.2018 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் அதற்கு முன்பே வாதி மீது இந்நீதிமன்றத்தில் கேவியேட் மனு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அந்த கேவியேட் மனு என்றால் சரிதான். **அந்த கேவியேட் மனுவின் சார்வு நகல் வா.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வாதி 27.10.2018 ல் வீட்டை காலிசெய்யும் படி என்னிடம் கேட்டார் என்றால் காலி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

12. வாதி 27.10.2018 ல் வீட்டை காலிசெய்யும் படி என்னிடம் கேட்ட பின்பு தான் கேவியேட் மனு தாக்கல் செய்தேன் என்றால் அவர் கேட்ட பின்பு தான் தெரியும். வா.சா.ஆ.1 பத்திரம் பற்றி வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் எனக்கு தெரியவந்தது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் வா.சா.ஆ.1 யை எனது தகப்பனார் எழுதிக்கொடுக்கவில்லை என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆன 06.03.1990 ல் எனது தகப்பனார் வாதிக்கு ஒரு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்ததை நான் ஒப்புக்கொண்டு உள்ளேன் என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ.1 யை எனது தகப்பனாரை போல் வேறு ஒரு நபரை வைத்து எழுதி வாங்கி உள்ளதாக எதிர்கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்தையும், வா.சா.ஆ.13 உள்ள ஒப்புக்கொள்ளப்பட்ட எனது தகப்பனாரின் கையெழுத்தையும், ஒப்பிட்டு பார்க்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். கையெழுத்து நிபுணர் தாக்கல் செய்த அறிக்கையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எனது வழக்கறிஞரிடம் விபரம் கேட்டேனா என்றால் கேட்டேன். மேல்முறையீடு செய்யப்போவதாக சொன்னார்கள். ஏன் மேல்முறையீடு செய்யப்போவதாக

சொன்னார்கள் என்றால் அது சரியானதாக தெரியாததால் மேல்முறையீடு செய்யப்போவதாக சொன்னார்கள்.

14. கையெழுத்து நிபுணர் தாக்கல் செய்த அறிக்கையில் வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ. 13 ல் உள்ள கையெழுத்து ஒரே நபர் கையெழுத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் எங்களுக்கு திருப்தி இல்லாததால் மேல்முறையீடு செய்யப்போகிறோம். தற்போது வரை மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 மற்றும் வா.சா.ஆ. 13 ல் உள்ள கையெழுத்து எனது தகப்பனார் கையெழுத்து என்பதால் தான் தற்போது வரை மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் அவர் வீடு கட்டி அனுபவம் செய்து வந்தார் என்றாலும் சரியல்ல. கூட்டாகத்தான் அனுபவம் செய்து வந்தார். பின்னர் எனது தகப்பனார் பிராது தபசில் சொத்தை குடும்ப அத்தியாவசிய தேவைக்காக 27.05.1993 ல் ரூ. 70,000/– வாதிக்கு கிரையத்திற்கு கொடுத்து அனுபவத்தையும் ஒப்படைத்து விட்டார் என்றால் சரியல்ல.

15. அது முதல் வாதியே அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. 1993 ம் வருடம் ஜீலை மாதம் எனது தகப்பனார் பிராது தபசில் சொத்தை வாதியிடம் வாடகைக்கு கேட்டார் என்றால் சரியல்ல. வாதியும், எனது தகப்பனார் வாதியின் மாமனார் என்பதால் வாடைக்கு கொடுக்க சம்மதித்து மாத வாடகை ரூ.1000/– என்றும், ஒவ்வொரு மாத வாடகையையும் அடுத்த ஆங்கில மாதம் 5 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்ற வாய்மொழி ஒப்பந்தின் அடிப்படையில் 01.08.1993 ம் வருடம் முதல் நானும், எனது தகப்பனாரும், பிராது தபசில் சொத்தில் வாடகை தாரர் முறையில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வாதியின் மாமனார் என்பதால் முன் பணம் எதுவும் வாதி பெற்றுக்கொள்ள வில்லை என்றால் சரியல்ல.

16. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் போது பிராது தபசில் சொத்திற்கு முறையாக வாடகை செலுத்தியது கிடையாது என்றால் வாடகைக்கு

குடியிருக்க வில்லை. வாதி எனது தகப்பனார் வாதியின் மாமனார் என்பதால் வாடகை கொடுக்கும் போது வாங்கிக்கொள்வார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் காலத்திற்குபிறகு நானும், 2ம் பிரதிவாதியும் வாய்மொழி ஒப்பந்ததின் அடிப்படையில் வாடகை தாரராக இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதி 2015 ஜனவரி மாதம் முதல் ரூ.1500/- வாடகை கேட்டார்என்றாலும், அதற்கு சம்மதித்து நானும் 2ம் பிரதிவாதியும் வாடகைக்கு குடியிருந்து வருகிறோம் என்றாலும் சரியல்ல. நானும் 2ம் பிரதிவாதியும் பிராது தபசில் சொத்திற்கு வாதியிடம் முறையாக வாடகை செலுத்துவது கிடையாது என்றால் எந்த ஒரு வாய்மொழி ஒப்பந்தமும் கிடையாது.

17. வாதி பலமுறை என்னிடமும் , 2ம் பிரதிவாதியிடமும் வாடகை கேட்டதற்கு செலுத்தவில்லை என்றால் நாங்கள் உரிமையாளர் என்ற முறையில் கூட்டாக அனுபவித்து வருகிறோம். வாதிக்கு நானும், 2ம் பிரதிவாதியும் உறவினர் என்பதால் எந்த விதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2018 ஜனவரி முதல் வாதி ரூ.1600/- வாடகை கேட்டார் என்றாலும், அதற்கு சம்மதித்து நானும் 2ம் பிரதிவாதியும் வாடகைக்கு குடியிருந்து வருகிறோம் என்றாலும் சரியல்ல.

18. வாதிக்கு ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான். வாதியின் சொந்த உபயோகத்திற்கு பிராது தபசில் சொத்து தேவைப்பட்டதால் 27.09.2018ல் பிராது தபசில் சொத்தை காலி செய்ய வாதி கேட்டார் என்றால் சரியல்ல. அதற்கு நானும் 2ம் பிரதிவாதியும் ஒரு மாதத்தில் காலி செய்து தருவதாக சொன்னோம் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி காலி செய்து தராததால் வாதி மீண்டும் 27.10.2018 ல் சொத்தை காலி செய்து தரக்கேட்டார் என்றால் சரியல்ல. நான் மீண்டும் தருவதாககூறி நாள் கடத்தி வந்தேன் என்றால் சரியல்ல. அதனால் வாதி 29.11.2018ல் வாதிக்கும் எங்களுக்கும் உள்ள வாய்மொழி வாடகை ஒப்பந்ததை ரத்து செய்து அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்புக்கு நான் பொய்யான காரணம் குறிப்பிட்டு 15.12.2018ல் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்புக்கும்

பின்பும் பிராதுதபசில் சொத்தை காலி செய்து கொடுக்காததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிராது தபசில் சொத்தை அப்துல் காதர் வாரிசுகள் கூட்டாக அனுபவம் செய்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிராதுதபசில் சொத்தில் எங்கள் தகப்பனாருக்கு 2/7 பாகமும் அவரது சகோதரருக்கு 2/7 பாகமும் சகோதரிகளுக்கு 1/7 பாகமும் பாத்தியப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பவோட சகோதரர் பெயர் முஷா அவரை நான் பார்த்துள்ளேன். அவர் இலங்கையில் இருந்து இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் இருக்கிறார்கள். அவரது இறப்புசான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ்  தாக்கல் செய்யலமா என்றால் கேட்டு பார்க்கிறேன். தாவா வழக்கை பொறுத்தவரையில் காலம்சென்ற காதர் முகைதீன் அவர்களின் வாரிசுகள் முஷா அவர்களின் வாரிசுகள் ராபியா உம்மாள் வாரிசுகள், முகைதீன் பாத்திமாளின் வாரிசுகள் ஜமால் பீவியின் வாரிசுகள் ஆகியோர்கள் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர் கிடையாது என்றால் சரியல்ல. பிராதுதபசில் சொத்தை எனது தகப்பனார் எழுதிக் கொடுத்துள்ளார் என்பதால் நான் கேட்டுள்ள எதிர்கேரிக்கை கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. நான் கூடுதல் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளபடி 60 ஆண்டுகளுக்கு மேலாக பிராது தபசில் சொத்தில் வாதிக்கு தெரிய அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டு அவர் அவரது சொந்த செலவில் வீடு கட்டி அனுபவித்து வந்து குடும்ப அத்யாவசிய தேவைக்காக 27.05.1993 ல் வாதிக்கு கிரையத்துக்கு கொடுத்து வாதி அனுபவித்து வந்து நானும் என் தகப்பனாரும் வாய்மொழி ஒப்பந்ததின் அடிப்படையில் வாடகைதாரராக குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதிக்கு தற்போது பிராது தபசில் சொத்து தேவைப்படுவதால் நான் பிராது தபசில் சொத்தை காலி செய்து பிராது தபசில் சொத்தின் அனுபவத்தை வாதியிடம் ஒப்படைக்க வேண்டியது என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒப்பம்/-

சா. முத்துலெட்சுமி

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவைகுண்டம்.